

# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்



மின்னிதழ் ஜூலை 2025



## செயலர் பக்கம்

**அருள்பணி. சு. மரிய சூசை**

அன்பு உறவுகளே!

'யானையின் பலம் தும்பிக்கையிலே. மனிதரின் பலம் நம்பிக்கையிலே' என்பது நாம் நன்கு அறிந்த ஒரு முதுமொழி. நம்பிக்கை நம்முடைய வாழ்வுக்கு மிகவும் அவசியமானது. அது நம் வாழ்வில் நிச்சயம் நமக்கு அற்புதம் செய்யும் என்பதையெல்லாம் நாம் நன்கு அறிந்திருந்தாலும், நம்பிக்கைக் குறைபாடு என்பது நம்மிடையே மறுக்கமுடியாது.

நம்பிக்கைச் சிறகுகள் மட்டுமே நம்முடைய வாழ்வில் நமது சிகரங்களை எட்டிப்பிடிக்க நம்மை இட்டுச்செல்லும். நம்பிக்கை என்பது ஒரு பாலம் போன்றது. நம்முடைய கடந்த காலத்திலிருந்து எதிர்காலத்திற்குச் சென்றிட, நாம் நடந்து கடக்க வேண்டிய பாலம் நம்பிக்கை. 'நம்பிக்கையில்' நடைபோடுவதாலும், 'நம்பிக்கையோடு' நடைபோடுவதாலும் நாம் வளமான வருங்காலத்தை, ஏற்றமிகு எதிர்காலத்தை கண்டிப்பாக அடைய முடியும்.நம்முடைய நம்பிக்கையின் நகர்வுகள் சிறிதாகக் காணப்பட்டாலும் அவற்றின் அதிர்வுகள் நிச்சயம் பெரிதாக இருக்கும். விவிலியம் சொல்வதைப் போன்று 'கடுகளவு நம்பிக்கை கடலளவு அற்புதம்' என்பது நமக்குப் புரியட்டும். நம்பிக்கை என்னும் பாலத்தைக் கட்டி, நமது வாழ்வில் இதுவரை தொடமுடியாத தொலைவுகளையும் தொட்டுவிடத் தீர்மானிப்போம்.

# யூபிலி ஆண்டு அறிவோம்

## புனித கதவு

கத்தோலிக்க திருஅவையில், யூபிலி ஆண்டில், "புனித கதவு" ஒரு மிகப்பெரிய முக்கியமான அடையாளம். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து நிலைவாழ்வுக்குரிய வாயிலை, மனித குலத்திற்கு திறந்து விட்டார். அந்த மீட்பின் வாயிலை "புனித கதவு" நினைவூட்டுகிறது.



கத்தோலிக்க திருஅவையில், கதவு என்பது

- ஆலயத்தில் புனிதமானவைக்கும் புனிதமற்றவைக்கும் இடையிலான பிளவைக் குறிக்கிறது.
- கடவுளின் உயிருள்ள பேழையான அன்னை மரியாளைக் குறிக்கிறது. இவர் எப்போதும் திறந்த கரங்களுடன் கடவுளின் பிள்ளைகளை வரவேற்கிறார்.
- இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. (நிலைவாழ்வுக்கான ஒரே வழி - யோவான் 10:9) (கதவு அருகில் நிற்கும் இயேசு - திருவெளிப்பாடு 3:20)

பாரம்பரியமாக ஒவ்வொரு யூபிலி ஆண்டையும், திருத்தந்தை அவர்கள், உரோமையில், புனித கதவை திறந்து வைத்து துவங்குகிறார். இச்சடங்கு நாம் பாவத்திலிருந்து விடுபட்டு மீட்பில் இயேசுவைச் சந்திக்க வருகின்றோம் என்பதை அடையாளப்படுத்துகிறது.

## திருத்தந்தையின் பெரிய பசிலிக்காக்கள்

கலாச்சார பின்புலத்திலும், திருப்பயணங்களின் மையமாகவும் திகழும் ஆலயங்களுக்கு 'பசிலிக்கா' (பெருங்கோவில்) என்ற சிறப்பு தகுதியை திருத்தந்தை வழங்குகிறார்.உலகெங்கும் பல பசிலிக்காக்கள் உள்ளன.
அவற்றுள், உரோமையில் உள்ள நான்கு ஆலயங்களை திருத்தந்தையின் பெரிய பசிலிக்காக்கள் என்று அழைக்கின்றோம்.



**புனித இலாத்தரன் பெரிய பசிலிக்கா** - திருத்தந்தையின் இருப்பிடமும், உரோமை மறைமாவட்டத்தின் தலைமைக் கோவிலாகவும் திகழும் இவ்வாலயம், கத்தோலிக்க திருஅவையின் " தாய் கோவில்" ஆக கருதப்படுகிறது.



**புனித பேதுரு பெரிய பசிலிக்கா** - வத்திக்கான் நகரில் புனித பேதுரு கல்லறையின் மேல் அமைந்துள்ளது. உலகின் மிகப்பெரிய ஆலயமாகத் திகழ்கின்றது.



**உரோமையின் சுவர்களுக்கு வெளியே அமைந்த புனித பவுல் பெரிய பசிலிக்கா** - புனித பவுல் கல்லறையின் மேல் அமைந்துள்ளது.



**புனித மரியன்னை பெரிய பசிலிக்கா** - உரோமையில் மரியன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மிகப் பெரிய ஆலயம்.

இவை நான்கிலும் திருத்தந்தையின் இருக்கையும் பலிபீடமும் உள்ளதால் இவை "திருத்தந்தையின் பெரிய பசிலிக்காக்கள்" என்று அழைக்கப்படுகின்றன. இவை நான்கிலும் "புனித கதவை" நாம் பார்க்க முடியும்.

# ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாசறை











15.06.2025 ஞாயிறு அன்று மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயத்திலும் 22.06.2025 ஞாயிறு அன்று திருச்சி நல்லாயன் நிலையத்திலும் ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாசறை நடைபெற்றது. கிறிஸ்துவ வாழ்வு பணிக்குழுச் செயலர் ஞாயிறு திருப்பலியை நிறைவேற்றி, கிறிஸ்துவின் போதிக்கும் பணியில் மறைக்கல்வி ஆசிரியர்கள் பங்கெடுக்கும் விதம் குறித்து மறையுரையாற்றினார். புனிதர்கள், திருவழிபாடு, அருளடையாளங்கள், திருஅவை ஆகிய தலைப்புகளில், இவ்வாண்டுக்கான "அருள் வாழ்வு மறைக்கல்வி" என்னும் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. திருச்சியில் நம் மறைமாவட்ட ஆயர் மேதகு. ச. ஆரோக்கியராஜ் அவர்கள் இவ்வாண்டுக்கான புதிய பாட ஏடுகளை வெளியிட்டு மறைக்கல்வியின் முக்கியத்துவம் குறித்து உரை வழங்கி மாணாக்கரை மறையறிவில் வளர்க்க ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து செயலர் அவர்கள் தமிழக ஆயர் பேரவையின் மறைக்கல்வி பணிக்குழுத் தலைவர் ஆயர் மேதகு. ஆல்பர்ட் அனஸ்தாஸ் அவர்களின் எல்லாருக்கும் மறைக்கல்வி தொடர்பான சுற்றறிக்கையை வாசித்தார்.





பிறகு பங்கேற்பாளர்கள் 5 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு புதிய பாடத்திட்டம் அவரவர் குழுக்களில் கற்பிக்கப்பட்டது. மதிய உணவிற்குப் பிறகு ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகளுக்கான பாடல்களும், விவிலிய விளையாட்டுகளும் கற்றுக் கொடுக்கப்பட்டன. இறுதியாக பங்கேற்பாளர்கள் 5 குழுக்களாக தாங்கள் பயிற்சிப் பாசறையில் கற்றவற்றை பாடல், நடனம், நாடகம் போன்ற கலை வடிவங்களில் வெளிப்படுத்தி மகிழ்ந்தனர். பின்னர் செயலர் இவ்வாண்டுக்கான ஞாயிறு மறைக்கல்வி ஆண்டுத்திட்டம், கடந்த ஆண்டு ஞாயிறு மறைக்கல்வி சிறப்பு தேர்வுகளில் வெற்றி பெற்றவர்கள் விபரங்கள், இவ்வாண்டுக்கான ஞாயிறு மறைக்கல்விப் பாடநூல்கள், புத்தகப் பை வெளியீடு, ஞாயிறு மறைக்கல்வி ஆண்டு விழா, சிறப்புத் தேர்வு, பங்கு சந்திப்புகள் குறித்து அறிவிப்புகள் வழங்கி விளக்கமளித்தார்.

## ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாசறை



மணப்பாறையில் நடைபெற்ற பயிற்சியில் மணப்பாறை மறைவட்டத்தைச் சேர்ந்த 18 பங்குகளிலிருந்து 68 நபர்களும், கீரனூர் மறைவட்டத்தைச் சேர்ந்த 2 பங்குகளிலிருந்து 10 நபர்களும் பங்கேற்றனர். திருச்சியில் நடைபெற்ற பயிற்சியில் புத்தூர் மறைவட்டத்தைச் சேர்ந்த 13 பங்குகளிலிருந்து (அருங்கொடை இல்லம் உட்பட) 63 நபர்களும், கிராப்பட்டி மறைவட்டத்தைச் சேர்ந்த 13 பங்குகளிலிருந்து 83 நபர்களும், பொன்மலை மறைவட்டத்தைச் சேர்ந்த 16 பங்குகளிலிருந்து (வாழவந்தான் கோட்டை முகாம் உட்பட) 99 நபர்களும், கீரனூர் மறைவட்டத்தைச் சேர்ந்த 10 பங்குகளில் இருந்து 44 நபர்களும் பங்கேற்றனர். ஆக மொத்தம் 72 பங்குகளில் இருந்து 367 ஆசிரியர்கள் இப்பயிற்சியில் பங்கேற்று பயனடைந்தனர். இப்பயிற்சியில் கிராப்பட்டி, பொன்மலை, புத்தூர் ஆகிய மறைவட்டங்களின் அனைத்துப் பங்குகளும் பங்கேற்றது பாராட்டுக்குரியது. பங்கேற்ற அனைத்து பங்குகளுக்கும் கிளைப் பங்குகளுக்கும் பாட ஏடுகள், வருகைப் பதிவேடுகள், புத்தகப் பை, பாடல் தாள்கள் ஆகியவை வழங்கப்பட்டன. பயிற்சிக்கு ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களை அனுப்பி வைத்த அனைத்து பங்குத் தந்தையருக்கும் பணிக்குழுவின் அன்பு கலந்த நன்றியும் வாழ்த்தும்.





# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்




























# பள்ளி தலைமையாசிரியர்கள், மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி ஒருங்கிணைப்பாளர்கள், பாலர் சபை வழிகாட்டிகளின் ஆலோசனைக் கூட்டம்

நமது மறைமாவட்டக் கத்தோலிக்கப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரை கத்தோலிக்க நம்பிக்கையிலும், ஒழுக்க நெறிகளிலும் வளர்க்கும் பொருட்டு நமது கத்தோலிக்கப் பள்ளிகளில் மறைக்கல்வியும் நன்னெறிக்கல்வியும் பயிற்றுவிக்கப்படுகிறது. இக்கல்வியாண்டில் இப்பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு 24.06.2025 செவ்வாய் அன்று திருச்சி நல்லாயன் நிலையத்திலும் 25.06.2025 புதன் அன்று மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயத்திலும் அனைத்து பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், மறைக்கல்வி நன்னெறிக்கல்வி ஒருங்கிணைப்பாளர்கள், பாலர்சபை வழிகாட்டிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.







திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தை நம் மறைமாவட்ட ஆயர் மேதகு. ச. ஆரோக்கியராஜ் அவர்கள் தலைமையேற்று தொடங்கி வைத்தார். அவர் தனது உரையில் ஆசிரியப் பணி என்பது ஓர் அழைத்தல், சிறந்த ஆசிரியரான இயேசுவைப் பின்பற்றி அனைத்து ஆசிரியர்களும் தங்களது பணிகளைச் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார். பின்பு செயலர் அவர்கள் கடந்த கல்வி ஆண்டுகளில் இப்பணியில் ஆதரவளித்த ஆசிரியர்களுக்கும், பள்ளி நிர்வாகத்திற்கும் வாழ்த்தும் நன்றியும் கூறி தொடங்கிய தமது உரையில் பள்ளி மறைக்கல்வி நன்னெறிக்கல்வி, பாலர் சபை ஆகியவை இயங்கும் முறை குறித்து விளக்கம் அளித்தார். தமிழக ஆயர் பேரவையின் மறைக்கல்விப் பணிக்குழு தலைவர் ஆயர் மேதகு. ஆல்பர்ட் அனஸ்தாஸ் அவர்களின் எல்லாருக்கும் மறைக்கல்வி தொடர்பான சுற்றறிக்கையை செயலர் வாசித்தார். கடந்த கல்வி ஆண்டுக்கான வரவு செலவு விபரங்களை வாசித்தார். ஒன்று முதல் ஆறாம் வகுப்பு வரையிலான புதிய மறைக்கல்வி புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.



பின்னர் இக்கல்வியாண்டுக்கான ஆண்டு திட்டமிடல் நடைபெற்றது. அதில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களும் தங்களுடைய பரிந்துரைகளை முன்வைத்தனர். பின் இக்கல்வியாண்டுக்கான புதிய திட்டங்கள், நெறிமுறைகள், வழிகாட்டுதல்களை வழங்கி செயலர் தந்தை அவர்கள் இவ்வமர்வை நெறிப்படுத்தினார். மதிய உணவுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் 89 பள்ளிகளில் இருந்து 113 ஆசிரியர்களும், மணப்பாறையில் நடைபெற்ற கூட்டத்தில் 37 பள்ளிகளில் இருந்து 38 ஆசிரியர்களும் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் பங்கேற்ற அனைத்துப் பள்ளிகளுக்கும் இக்கல்வியாண்டுக்கான பாலர் சபை வழிகாட்டி ஏடு, மறைக்கல்வி நன்னெறிக் கல்வி வழிகாட்டி ஏடு, மறைக்கல்வி நன்னெறிக் கல்வி சிறப்புத் தேர்வில் பரிசு பெறுபவர்கள் பட்டியல் ஆகியவை வழங்கப்பட்டன.







## ஜீலை மாதம் நடைபெறவுள்ள
## கிறிஸ்துவ வாழ்வு பணிக்குழு நிகழ்வுகள்

பீடச் சிறார் யூபிலி கொண்டாட்டம் - ஜீலை மாதம் 20 ஆம் தேதி திருச்சியிலும் ஜீலை மாதம் 27 ஆம் தேதி மணப்பாறையிலும் நடைபெறும்.

கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்



# இரண்டு படங்களுக்கு இடையே உள்ள 6 வித்தியாசங்களைக் கண்டுபிடித்து மகிழுங்கள்



